வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந.க.எண். 1819 /அ4/2023 நாள் : .04.2023

பொருள்: பள்ளிக்கல்வி – 2023 –22ம் கல்வியாண்டில் ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு விண்ணப்பங்களை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய அறிவுரைகள் வழங்கியது – தொடர்பாக

பார்வை :
1. அரசாணை (நிலை)எண்.176 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.17.12.2021
2. சென்னை– 6. பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.25154/அ1/இ2/2021 நாள்.30.12.2021
3. அரசாணை (நிலை)எண்.12 பள்ளிக் கல்வி (பக5 (1) துறை நாள்.03.02.2022.
4. அரசாணை (நிலை )எண்.15 பள்ளிக் கல்வி (பக5 (1) துறை நாள்.10.02.2022.
5. சென்னை– 6. பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.21243/சி3/இ1/2023 நாள் 26.04.2023

-----

வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு / நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் / முதுகலை ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் நிலை – 1 / கணினி பயிற்றுநர் நிலை – 1 / தொழிற்கல்வி அசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் நிலை – 2 / உடற்கல்வி ஆசிரியர்கள் / சிறப்பாசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர்களுக்கான 2022 – 2023 ஆம் ஆண்டுக்கான கலந்தாய்வு நெறிமுறைகள் பார்வையில் காணும் அரசாணை மற்றும் செயல்முறைகள் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 – 2022 ஆம் ஆண்டிற்கான பொது மாறுதல் கலந்தாய்வுகள் இணையதளம் வாயிலாக மேற்கொள்ளப்பட உள்ளதால் பொது மாறுதல் கோரும் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் பார்வையில் காணும் அரசாணையில் வழங்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் அறிவுரைகள் பின்பற்றி EMIS இணையத்தில் பதிவேற்றம் செய்து பரிந்துரைக்கப்பட வேண்டும் எனவும் இதில் தவறுகள் ஏற்படின் சம்பந்தப்பட்ட உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரே முழுப்பேற்க நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்க இயலாது எனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது. தலைமை ஆசிரியரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சார்ந்த ஆசிரியர்களின் படிவங்களை 02.05.2023 அன்று நண்பகல் 12.00 மணிக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் நேர்முக உதவியாளரிடம் ஒப்படைக்குமாறு அனைத்து அரசு / நகராட்சி / உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது

இணைப்பு.
பார்வை 1ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 5 இல் காணும் செயல்முறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் – 9.

27/4/23

பெறுநர்

1.வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது,

2. அனைத்து அரசு / நகராட்சி / உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்